## TAMIL NADU POLLUTION CONTROL BOARD

**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED QUARRYING OF COLOUR GRANITE IN AN EXTENT OF 17.09.0 HECTARES BY TAMIL NADU MINERALS LIMITED, SF.NO.1456 & 1458, SIVANMALAI VILLAGE, KANGEYAM TALUK, TIRUPPUR DISTRICT, TAMIL NADU HELD ON 16.08.2023 AT 11:00 AM AT M/S VELAVAN MAHAL, GIRIVALA PATHAI, SIVANMALAI VILLAGE, KANGEYAM TALUK, TIRUPPUR DISTRICT.**

**Name of the Project:**

| | |
|---|---|
| **M/s. Tamil Nadu Minerals Limited**,<br>SF.No.1456 & 1458,<br>Sivanmalai Village,<br>Kangeyam Taluk,<br>Tiruppur District. | Proposed Colour Granite Quarry over an extent of 17.09.0 Hectares |

**Participants:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru. T.P.Jai Beam | : | **District Revenue Officer,**<br>Tiruppur District. |
| 2 | Er.M.Saravanakumar | : | **District Environmental Engineer,**<br>TamilNadu Pollution Control Board,<br>Tiruppur North. |
| 3. | Er.S.Bharathiraja | : | **Assistant Environmental Engineer,**<br>TamilNadu Pollution Control Board,<br>Tiruppur North. |
| 5. | Dr.P.Ramesh | : | **Assistant Environmental Engineer,**<br>TamilNadu Pollution Control Board,<br>Tiruppur North. |
| 6. | Er.MAM. Mannar Thippu Sulthan | : | **Assistant Engineer,**<br>TamilNadu Pollution Control Board,<br>Tiruppur North. |
| 7. | Thiru.M.Ramesh Babu | : | **Divisional Manager, Mettur Dam**<br>M/s. Tamil Nadu Minerals Limited |
| 8. | Dr. E.Ganesan | : | Deputy Manager,<br>M/s. Tamil Nadu Minerals Limited, Mining Lease |
| 9 | Public | : | 171 Nos (annexure enclosed) |

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruppur North.**

On behalf of the Tiruppur District Administration and the Tamil Nadu Pollution Control Board, he welcomed everyone including the public who attended the public hearing. He said that environmental consultant will give a project briefing for setting up color granite quarry by Tamil Nadu Minerals Limited in an extent of 17.09.0 hectares in Sivanmalai village, Kangeyam Taluk. Later, he asked the public to express their views regarding it. Public comments will be audio and video recorded and sent to the State Environmental Impact Assessment Authority (SEIAA) along with a note of meeting proceedings. Following this, he requested the District Revenue Officer to start the meeting.

**District Revenue Officer**

The District Revenue Officer welcomed all the public to the public consultation meeting. Further, the public hearing with respect to Tamil Nadu Minerals Limited, Sivanmalai Village Kangeyam Taluk will be recorded and the views expressed by the public in the consultation meeting will be forwarded to the State Environmental Impact Assessment Authority (SEIAA) in Chennai and a decision will be taken through them. A project presentation will now be presented by the Tamil Nadu Minerals Limited. Thereafter the comments of the public will be audio and video recorded and sent to the SEIAA, Chennai along with the proceedings of the meeting. Based on that, a decision regarding environmental clearance will be taken, he said. He has now asked the company officials to start a project briefing on the quarry.

**Dr. E.Ganesan, Deputy Manager, Tamil Nadu Minerals Limited, Mining Lease.**

The project presentation regarding Proposed Colour Granite Quarry over an extent of 17.09.0 Hectares by M/s. Tamil Nadu Minerals Limited which includes as follows:

1. Project description

2. Corporate Responsibility

3. Environmentally sensitive areas

4. Reserve of Color Granite Quarry

5. Summary of activity scale

6. Project cost

7. Mine Closure Scheme

8. Environmental description

9. Anticipated Environmental Impacts

10. Risk Identification and Management

11. Safety measures in quarry

12. Environmental Monitoring

13. Disposal of Waste

14. Occupational health measures

15. Development of green belt

16. Alternative analysis

17. Environmental Monitoring Scheme

18. Disaster Management Plan

19. Showed the advantages of the proposed mining project etc. through the project presentation.

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tirupur North.**

The District Environmental Engineer asked the public to give their views following the presentation of the project.

The public recorded their comments as follows.

**Mr. Mukilan, Coordinator, Tamil Nadu Environment Protection Movement**

In the project briefing, he said that there is no mining plan for this proposed project either. He said that 40 types of government documents were not attached and a petition in this regard has been given to the District Collector. He said that, without the mining plan, nothing can be said about the project. After DMK came to power, 8 granite quarries hearings have been held in Karur. 6 quarries have been held in Namakkal. He informed that all the above quarries were given all kinds of documents.

Tamil Nadu Minerals Limited is a Government Organization. But no documents are given. The consultant himself informed that the house is 250 meters away, but there are no documents or attachments about it. He said that he can continue after clarifying the explanation about mining plan and other documents.

**Mr. Eesan, Tamil Nadu Farmers Protection Association**

He asked everyone to stand up and asked if anyone supported the above said quarry. He requested that the project is to be cancelled immediately. Why you are breaking our Chinnamalai to export mineral wealth to foreign countries, he asked, Government of Tamil Nadu to cancel this scheme; They chanted to cancel it. A slogan was raised to

cancel the proposal to set up a granite quarry in Chinna Malai. A radical slogan was raised, No No No Granite Quarry.

**Mr. Mukilan, Coordinator, Tamil Nadu Environment Protection Movement**

He said that, in this public consultation meeting, if anyone gives an opinion, you will say that a consultation meeting has been held. No one will give petition; No one will comment about the project. However, he asked to cancel this public hearing. We will not discuss any issues related to this project; there are no 40 types of attachments. No one will speak and asked to cancel the meeting.

**Mr. Eesan, Tamil Nadu Farmers Protection Association**

According to the consensus of the people present, he asked to cancel the meeting. He requested on behalf of the public that this quarry is not necessary.

**Mr. Veluchamy, PAP Vellakovil Water Conservation Society**

He informed that, the PAP canal is located within 10 meters from the quarry; which is irrigating 1500 acres around Chinnamalai. So, it is a restricted area. He requested that this project should not be carried out for any reason.

**Mr. Mukilan, Coordinator, Tamil Nadu Environment Protection Movement**

Let no one comment; No one said that.

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tirupur North.**

He said that, 17-18 members of the public have given their names to comment about the project.

**Mr. Mukilan, Coordinator, Tamil Nadu Environment Protection Movement**

The above 18 are those who say they don't want the project; He said that, no one supported this quarry.

**Kangeyam Panchayat Union Chairman**

On behalf of Kangeyam Panchayat Union, there is ecology where various families can live. Also, Sivanmalai is a popular tourist destination in Tamil Nadu; He said that setting up a quarry and mining stones will cause environmental damage. He said it would affect the livelihood of residential and agricultural areas. He also said that, in the forthcoming Panchayat council meeting of the Kangeyam Panchayat Union, a resolution will be passed that the above project should not be set up. He requested that, the resolution should be passed not only in Kangeyam Panchayat Union, but also in Sivanmalai

Panchayat Union. He said that the Chief Minister's mini sports stadium will be located nearby. He also said that no public is in favor of the scheme.

After that, slogans were raised for cancellation.

**District Revenue Officer**

The District Revenue Officer thanked the public and the meeting ended.

**Enclosures:**

1. Attendance sheet of participants (Annexure - A)
2. Video (DVD) of Public hearing (Annexure - B)
3. Petitions received against quarry (Annexure - C) – 2 Nos.

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Tiruppur North**

**District Revenue Officer,**
**Tiruppur District**

**The District Collector, Tiruppur District.**

Elected representatives including Kangeyam Panchayat Union, Chairman, Farmers Associations and public strongly objected to the proposal. Their claims and objections need to be addressed before issuing clearances.

**District Collector,**
**Tiruppur District.**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

**திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், சிவன்மலை கிராமத்தில் 17.09.0 ஹெக்டர்ஸ் பரப்பில் உத்தேசிக்கப்பட்டுள்ள சிவன்மலை கலர் கிரானைட் குவாரி திட்டத்திற்கு திருப்பூர் மாவட்டம், காங்கயம் வட்டம், சிவன்மலை கிராமத்தில் அமைந்துள்ள தி/ள். வேலவன் மஹாலில் 16.08.2023 அன்று காலை 11.00 மணி அளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்ட நடவடிக்கை குறிப்புகள்.**

**திட்டத்தின் பெயர்**

உத்தேசிக்கப்பட்டுள்ள சிவன்மலை கலர் கிரானைட் குவாரி சிவன்மலை கிராமம், காங்கயம் வட்டம், திருப்பூர் மாவட்டம் (மொத்த பரப்பளவு 17.09.0)

| | |
|---|---|
| **தி/ள்.தமிழ்நாடு கனிம நிறுவனம்,**<br>க.ச.எண்.1456 மற்றும் 1458,<br>சிவன்மலை கிராமம்,<br>காங்கேயம் வட்டம்,<br>திருப்பூர்மாவட்டம். | 17.09.0 ஹெக்டர்ஸ் பரப்பில் உத்தேசிக்கப்பட்டுள்ள சிவன்மலை கலர் கிரானைட் குவாரி |

**பங்கேற்றோர்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.த.ப.ஜெய்பீம் | : | **மாவட்ட வருவாய் அலுவலர்,**<br>திருப்பூர் மாவட்டம். |
| 2 | திரு.ம.சரவணகுமார் | : | **மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பூர்வடக்கு. |
| 3. | திரு.சு.பாரதிராஜா | : | **உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,**<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பூர் வடக்கு. |
| 5. | முனைவர். ப. ரமேஷ் | : | **உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,**<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பூர் வடக்கு. |
| 6. | திரு.எம்ஏஎம். மன்னர் திப்பு சுல்தான் | : | **உதவி பொறியாளர்,**<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பூர் வடக்கு. |
| 7. | திரு. மு.ரமேஷ்பாபு | : | **கோட்ட மேலாளர், மேட்டூர் கோட்டம்**<br>தி/ள். தமிழ்நாடு கனிம நிறுவனம், |
| 8. | முனைவர்.இ.கணேசன் | : | **துணை மேலாளர்,**<br>தி/ள்.தமிழ்நாடு கனிம நிறுவனம், சுரங்கக் குத்தகை |
| 9. | பொதுமக்கள் | : | 171 எண்ணிக்கை (இணைக்கப்பட்டுள்ளது) |

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், திருப்பூர் வடக்கு.**

திருப்பூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சார்பாக பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரையும் வரவேற்றார். காங்கேயம் வட்டம், சிவன்மலை கிராமத்தில் 17.09.0 ஹெக்டேர் பரப்பளவில் தி/ள்.தமிழ்நாடு கனிம நிறுவனத்தால் கலர் கிரானைட் குவாரி அமைப்பதற்கு சுற்றுச்சூழல் ஆலோசகரால் திட்ட விளக்கவுரை அளிக்கப்படும் எனத் தெரிவித்தார். பின்னர், அதன் தொடர்பான கருத்துக்களை பொதுமக்கள் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டார். பொதுமக்களின் கருத்துக்களை ஒலி மற்றும் ஒளி பதிவு செய்யப்பட்டு கூட்ட நடவடிக்கை பற்றிய குறிப்புடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு (SEIAA) அனுப்பப்படும் எனத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களை கூட்டத்தை தொடங்கி வைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

**மாவட்ட வருவாய் அலுவலர்.**

மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள அனைவரையும் வரவேற்றார். மேலும், தமிழ்நாடு கனிம நிறுவனம், காங்கேயம் வட்டம், சிவன்மலை கிராமத்தில் குவாரி அமைப்பதற்கான கருத்துக் கேட்பு கூட்டத்தில் பொதுமக்களால் எடுத்துரைக்கப்படும் கருத்துக்களை பதிவு செய்து சென்னையில் உள்ள மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு (SEIAA) – விற்கு அனுப்பப்பட்டு அவர்களின் மூலமாக முடிவு எடுக்கப்படும் என தெரிவித்தார். தி/ள்.தமிழ்நாடு கனிம நிறுவனத்தால் தற்பொழுது திட்ட விளக்கவுரை எடுத்துரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து பொது மக்களின் கருத்துக்களானது ஒலி மற்றும் ஒளி பதிவு செய்யப்பட்டு, கூட்ட நடவடிக்கை தொடர்பான இணைப்புகளுடன் சென்னையில் உள்ள SEIAA – விற்கு அனுப்பப்படும். அதனடிப்படையில் சுற்றுச்சூழல் அனுமதி தொடர்பான முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். தற்பொழுது நிறுவனத்தை சார்ந்தவர்கள் குவாரியை பற்றிய திட்ட விளக்கவுரையை தொடங்குமாறு கேட்டுக் கொண்டார்.

**முனைவர்.இ.கணேசன், துணை மேலாளர், தி/ள்.தமிழ்நாடு கனிம நிறுவனம், சுரங்கக் குத்தகை.**

தி/ள்.தமிழ்நாடு கனிம நிறுவனம் தொடர்பான

1. திட்ட விளக்கம்
2. நிறுவன பொறுப்பேற்பு
3. சுற்றுச்சூழல் உணர்திறன் பகுதிகள்
4. கலர் கிரானைட் குவாரி கையிருப்பு
5. செயல்பாடு அளவின் சுருக்கம்
6. திட்ட செலவு
7. சுரங்க மூடல் திட்டம்
8. சுற்றுச்சூழல் விளக்கம்
9. எதிர்நோக்கும் சுற்றுச்சூழல் தாக்கங்கள்
10. இடர் அடையாளம் மற்றும் மேலாண்மை
11. குவாரியில் பாதுகாப்பு நடவடிக்கைகள்

12. திட்ட கண்காணிப்பு சுற்றுச்சூழல் கண்காணிப்பு
13. கழிவுகளை அகற்றுவது
14. தொழில்சார் சுகாதார நடவடிக்கைகள்
15. பசுமை வளையம் மேம்பாடு
16. மாற்று பகுப்பாய்வு
17. சுற்றுச்சூழல் கண்காணிப்பு திட்டம்
18. பேரிடர் மேலாண்மை திட்டம்
19. பரிந்துரைக்கப்பட்ட சுரங்க திட்டத்தின் நன்மைகள் போன்றவற்றை திட்ட விளக்கவுரை மூலம் காட்டினார்.

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், திருப்பூர் வடக்கு.</u>

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் திட்ட விளக்கவுரையை தொடர்ந்து பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

பொதுமக்கள் கீழ்க்கண்டவாறு தங்களது கருத்துக்களை பதிவு செய்தனர்.

<u>திரு.முகிலன், தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம் ஒருங்கிணைப்பாளர்</u>

திட்ட விளக்கவுரையில், சுரங்க திட்டம் கூட இல்லை என தெரிவித்தார். மேலும் 40 வகையான அரசு ஆவணங்கள் இணைக்கப்படவில்லை எனவும் இது தொடர்பான மனுவானது மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கொடுக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார். சுரங்கத் திட்டம் இல்லாமல் இத்திட்டம் குறித்து எதுவும் பேச இயலாது என தெரிவித்தார். தி.மு.க ஆட்சிக்கு வந்த பின்னர் 8 கிரானைட் குவாரிக்கான கருத்துக் கேட்புக் கூட்டம் கரூரில் நடை பெற்றுள்ளது. நாமக்கல்லில் 6 குவாரிக்கு நடைபெற்றுள்ளது. மேற்கண்ட குவாரிகள் அனைத்திற்கும் அனைத்து வகையான இணைப்புகளும் கொடுக்கப்பட்டிருந்ததாக தெரிவித்தார்.

தமிழ்நாடு கனிம நிறுவனம் என்பது அரசால் நடத்தப்படும் நிறுவனம். ஆனால், எவ்வித இணைப்புகளும் கொடுக்கப்படவில்லை. 250 மீட்டரில் வீடு உள்ளது என்பதை ஆலோசகரே தெரிவித்தார் எனவும், ஆனால் அதைப்பற்றிய ஆவணங்களோ, இணைப்புகளோ இல்லை எனக் கூறினார். இணைப்புகள் (Annexure) குறித்த விளக்கத்தினை தெளிவுபடுத்திவிட்டு தொடரலாம் எனத் தெரிவித்தார்.

<u>திரு.ஈசன், தமிழ்நாடு விவசாயிகள் பாதுகாப்பு சங்கம்</u>

மேற்கண்ட குவாரியை யாராவது ஆதரிக்கிறீர்களா எனக் கேட்டு அனைவரையும் எழுந்து நிற்குமாறு கூறினார். இந்த திட்டத்தை உடனடியாக ரத்து செய்யுமாறு கேட்டுக் கொண்டார். கனிம வளத்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு எதற்கு எங்கள் சின்னமலையை உடைக்கிறீர்கள் என வினவினார். தமிழ்நாடு அரசே இத்திட்டத்தை ரத்து செய்; ரத்து செய் என கோஷம் போட்டனர். சின்ன மலையிலே கிரானைட் குவாரி அமைக்கும் திட்டத்தினை ரத்து செய்யுமாறு கோஷம் போடப்பட்டது. வேண்டாம் வேண்டாம் கிரானைட் குவாரி என தீவிர கோஷம் எழுப்பப்பட்டது.

**திரு.முகிலன், தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம் ஒருங்கிணைப்பாளர்**

இந்த கருத்துக் கேட்புக் கூட்டத்தில், யாராவது கருத்து தெரிவித்தால், கருத்துக் கேட்புக் கூட்டம் நடைபெற்றதாக சொல்லிவிடுவீர்கள், எனக் கூறினார். யாரும் மனு கொடுக்க மாட்டோம்; யாரும் கருத்து தெரிவிக்க மாட்டோம்; ஆதலால், இந்தக் கருத்துக் கேட்புக் கூட்டத்தை ரத்து செய்யுமாறு கூறினார். இக்குவாரி குறித்த எந்தப் பிரச்சனையும் பேச மாட்டோம்; எந்த ஆவணமும் இல்லை, 40 வகையான இணைப்புகளும் இல்லை. யாரும் பேசவில்லை கூட்டத்தை ரத்து செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

**திரு.ஈசன், தமிழ்நாடு விவசாயிகள் பாதுகாப்பு சங்கம்**

இங்கிருக்கும் மக்களின் ஒருமித்த கருத்துப்படி, கூட்டத்தை ரத்து செய்யுமாறு கேட்டுக் கொண்டார். இத்திட்டம் தேவையில்லை என பொதுமக்கள் சார்பாக கேட்டுக் கொண்டார்.

**திரு.வேலுச்சாமி, PAP வெள்ளக்கோவில் நீர் பாதுகாப்பு சங்கம்**

சின்னமலையை சுற்றி 1500 ஏக்கர் பாசன வசதி பெறும் PAP வாய்க்கால் 10 மீட்டருக்குள் உள்ளது. எனவே இது தடை செய்யப்பட்ட பகுதி ஆகும். எக்காரணத்தை கொண்டும் இத்திட்டத்தை மேற்கொள்ள கூடாது எனக் கேட்டுக் கொண்டார்.

**திரு.முகிலன், தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம் ஒருங்கிணைப்பாளர்**

யாரும் கருத்து கூற வேண்டாம்; யாரும் கூறவில்லை எனத் தெரிவித்தார்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், திருப்பூர் வடக்கு.**

பொதுமக்கள் 17–18 பேர் கருத்து தெரிவிப்பதற்கு பெயர் கொடுத்துள்ளதாக தெரிவித்தார்.

**திரு.முகிலன், தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம் ஒருங்கிணைப்பாளர்**

மேற்கண்ட 18 பேரும் திட்டம் வேண்டாம் என்று கூறுபவர்களே; யாரும் ஆதரிக்கவில்லை எனக் கூறினார்.

**காங்கேயம் ஊராட்சி ஒன்றிய தலைவர்**

காங்கேயம் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பாக, பல்வேறு குடும்பங்கள் வசிக்கக்கூடிய சூழலியியல் உள்ளது. மேலும், சிவன்மலை தமிழ்நாட்டிலேயே பிரசித்தி பெற்ற சுற்றுலாத் தளம்; இதில் குவாரி அமைப்பது, கற்களை வெட்டி எடுப்பது சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்தும் எனக் கூறினார். இது குடியிருப்புகள் மற்றும் விவசாயம் சார்ந்த பகுதி அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் எனக் கூறினார். மேலும், வருகின்ற காங்கேயம் ஊராட்சி ஒன்றிய சிறப்புக் கூட்டத்தில், மேற்கண்ட திட்டம் அமைக்கக் கூடாது என தீர்மானம் நிறை வேற்றப்படும் எனக் கூறினார். காங்கேயம் ஊராட்சி ஒன்றியம் மட்டுமில்லாமல், சிவன்மலை ஊராட்சி ஒன்றியத்திலும் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். முதலமைச்சரின் சிறு விளையாட்டு அரங்கம் அதன் அருகாமையிலேயே அமைய

பெறவுள்ளதாக தெரிவித்தார். மேலும், எந்த ஒரு பொதுமக்களும் இத்திட்டத்திற்கு ஆதரவாக இல்லை என தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து ரத்து செய்யுமாறு கோஷம் எழுப்பப்பட்டது.

**மாவட்ட வருவாய் அலுவலர்.**

மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் கூட்டத்தினற்கு நன்றியினை தெரிவித்தார். அத்துடன் கூட்டம் முடிவடைந்தது.

**இணைப்பு**

1. கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் வருகைப் பதிவேடு – (அ)
2. கருத்துக் கேட்புக் கூட்ட நடவடிக்கைகளைப் பதிவு செய்த வீடியோ குறுந்தகடுகள் – (ஆ)
3. குவாரிக்கு எதிராக பெறப்பட்ட மனுக்கள் – 2 எண்கள் – (இ)

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**திருப்பூர் வடக்கு.**

**மாவட்ட வருவாய் அலுவலர்**
**திருப்பூர் மாவட்டம்.**

**The District Collector, Tiruppur District.**

Elected representatives including Kangeyam Panchayat Union, Chairman, Farmers Associations and public strongly objected to the proposal. Their claims and objections need to be addressed before issuing clearances.

**District Collector,**
**Tiruppur District.**